### எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டின்


# உரிமைகளை விட்டுக்கொடுக்காத ஆட்சி; ‘திராவிட மாடல்’ ஆட்சி!

## ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரையில் உறுதி!








சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முழுக்க அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் தமிழ்நாடு தலைகுனியாது பார்ப்புரையானது நடைபெற்று வருகிறது.

பரப்புரை தொடங்கிய 23 நாட்களில் இதுவரை 161 தொகுதிகளில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது. 23.02.26 அன்று 9 சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன.

வீரபாண்டியில் சி.வி.எழிலரசன் , பெரம்பூரில் கலாநிதி வீராசாமி, சோழிங்கநல்லூரில் ஜெகத்ரட்சகன், குடியாத்தத்தில் கம்பம் செல்வேந்திரன், கலசப்பாக்கத்தில் எழிலன் நாகநாதன், சேந்தமங்கலத்தில் தயாநிதி மாறன், வாணியம்பாடியில் ஆர்.எஸ்.பாரதி, பொள்ளாச்சியில் கார்த்திகேய சிவசேனாபதி, அம்பாசமுத்திரத்தில் மனோஜ் பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

பொள்ளாச்சியில் பேசிய கார்த்திகேய சிவசேனாபதி, “இன்று ‘எம்.ஜி.ஆர். ஆட்சி, ஜெயலலிதா ஆட்சி’ தருவதாக சொல்லிக் கொண்டிருக்கும் எடப்பாடி பழனிசாமியின் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டு மக்கள் பட்ட கஷ்டங்கள் ஏராளம் என சொல்லி கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களைப் பட்டியலிட்டவர், அப்படிப்பட்ட மோசமான நிர்வாகம் ஒருபக்கம், கொரோனா பெருந்தொற்று மறுபக்கம் என்ற சூழலில் ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் அவர்கள் வீழ்ச்சியில் இருந்த தமிழ்நாட்டை மீட்டெடுத்துள்ளார் என எடுத்துரைத்தார். அதோடு ‘திராவிட மாடல்’ ஆட்சியினால்தான், இந்தியாவிலேயே தமிழ்நாடு 11.19% என்ற உச்சபட்ச வளர்ச்சி அடைந்து சாதனை படைத்துள்ளது.’ என குறிப்பிட்டார் “ நமது பிள்ளைகளின் கல்வியும், மாநிலத்தின் பொருளாதாரமும் இன்னும் வளர வேண்டும் என்றால், ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடர வேண்டும். தமிழ்நாட்டின் உரிமைகளை எவரிடமும் விட்டுக் கொடுக்காத இந்த அரசை, 2026ல் மீண்டும் அரியணையில் ஏற்ற வேண்டும்” என கேட்டுக்கொண்டர்.

எழிலன் நாகநாதன் பேசுகையில் “இந்த 5 ஆண்டுகளில் மட்டும் 100 மேம்பாலங்களைக் கட்டி முடித்துள்ளோம். கல்வி, விவசாயம், மருத்துவம் என அனைத்துத் துறைகளிலும் இன்று தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. ஒரு காலத்தில் பெண்கள் எங்காவது செல்ல வேண்டுமென்றால் கணவரிடமோ, மற்றவர்களிடமோ பேருந்து செலவுக்குப் பணம் கேட்கும் நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றி, இன்று பெண்கள் யாரிடமும் கையேந்தாமல் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் தன்னம்பிக்கையை இந்த அரசு தந்துள்ளது. அதோடு இந்தியாவிலேயே விவசாயிகளுக்காகத் தனி பட்ஜெட் தாக்கல் செய்த ஒரே அரசும் நமது திராவிட மாடல் அரசுதான்.” என பெருமிதத்தோடு தெரிவித்தார்.

தயாநிதி மாறன் அவர்கள் பேசுகையில் “கடந்த அ.தி.மு.க. ஆட்சி தமிழ்நாட்டின் உரிமைகளை அடமானம் வைத்த ஆட்சியாக இருந்தது, ஆனால் தற்போது எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டின் உரிமைகளை விட்டுக்கொடுக்காத ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி உள்ளது” என தெரிவித்தார். மேலும் பேசிய அவர் “பெண்களின் வங்கி கணக்கில் ரூ.5,000 நேரடியாக வரவு வைக்கப்பட்டது சமூகநீதி சார்ந்த முக்கிய நடவடிக்கை எனவும் பெண்கள் முன்னேற்றத்தின் மிக முக்கிய அம்சம் இது” எனவும் குறிப்பிட்டார்.

ஜெகத்ரட்சகன் அவர்கள் “ தமிழநாட்டில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை கொண்டு வந்து சமூக நீதியை நிலை நாட்டியவர் நமது முதலமைச்சர் அவர்கள் எனவும், காலை உணவுத் திட்டம், தூய்மை பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்குதல் போன்ற நலத்திட்டங்களின் பயன் பற்றி எடுத்துரைத்தார். “தாய் தந்தையை இழந்த குழந்தைகளுக்கு 2000 ரூபாய் வழங்கும் திட்டதை பற்றி மனமார புகழ்ந்து பேசினார். காலனி என்ற சொல்லின் மூலம் இன்னும் சாதிய அவமதிப்பு இருக்க கூடாது என்பதற்காக, காலனி என்ற பெயரை நீக்கும் சட்டத்தை கொண்டு வந்து சமூக நீதி காத்த அரசாக திராவிட மாடல் அரசு திகழ்கிறது என பேசினார்.

அனைத்து இடங்களிலும் பெண்களும், இளைஞர்களும் திரண்டு வந்து ஆதவரளித்தனர்.

# வெல்லும் தமிழ்ப் பெண்கள் !

## ‘ஸ்டாலினின் மகளிர் படை’ வீடு வீடாக பரப்புரை!

## ‘ஸ்டாலின் பஸ்’ மூலம் ஒவ்வொரு மகளிரும் ரூ.60,000 வரை சேமித்துள்ளனர்!





**சென்னை, பிப். 26 -**

**தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொண்டு வெற்றி பெறும் வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் ஸ்டாலினின் மகளிர் படையினர் முன்னெடுத்து வரும் வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை தமிழ்நாடு முழுக்க உற்சாகத்தோடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 23-2-2026 அன்று 32,759 வாக்குச்சாவடிகளில் தொடங்கிய பரப்புரையானது நேற்று முன்தினம் மேலும் 13,174 வாக்குச்சாவடிகள் இணைந்து மொத்தம் 45,933 வாக்குச்சாவடிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் ஸ்டாலினின் மகளிர் படையினர் நேரடியாக சென்று பரப்புரை செய்து வருகின்றனர்.**

இன்றைய பரப்புரைக் கூட்டத்தின் மையமாக திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்த முதல் நாள் முதலமைச்சர் அவர்களால் முதல் கையெழுத்திடப்பட்ட மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம் திட்டம் மகளிர் வாழ்க்கைக்கு எவ்வாறெல்லாம் பயன்பட்டு வருகிறது என ஸ்டாலினின் மகளிர் படையினர் எடுத்துக் கூறினர்.

பெண்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் விடியல் பேருந்தை ஸ்டாலின் பஸ் என்றே பெண்கள் அனைவரும் அழைக்கின்றனர். சுமார் 70 லட்சம் மகளிர்கள் விடியல் பேருந்தில் நாள்தோறும் பயணித்து பயனடைந்து வருகின்றனர். இதுவரை 855 கோடி முறை பெண்கள் பயணம் செய்துள்ளனர். ஒவ்வொரு மகளிரும் ஸ்டாலின் பஸ் மூலம் ரூ.60,000 வரை சேமித்துள்ளனர். இந்த சேமிப்பு பணம் ஒவ்வொரு குடும்பத்தின் மருத்துவ செலவு, கல்வி செலவு, அவசர தேவைக்கு, நீண்ட கால சேமிப்புக்கு என பலவகையில் பயன்பட்டு பெண்களின் பொருளாதார சுதந்திரத்தையும், சுயமரியாதையையும் உறுதி செய்துள்ளது. திராவிட மாடல் அரசினால் செயல்படுத்தி வரும் திட்டங்கள் பெண்கள் நலத் திட்டங்கள் மட்டுமல்ல; அவை பெண்கள் முன்னேற்றத் திட்டங்கள். என்பதை அனைத்துப் பெண்களிடமும் விளக்கி கூறப்பட்டது.

ஸ்டாலினின் மகளிர் படை ஒவ்வொரு வீட்டிற்கும் செல்லும் போது அங்குள்ள மகளிர் அன்போடு வரவேற்று டீ, காபி கொடுத்து உபசரிப்பதை பெரும்பாலான இடங்களில் பார்க்க முடிந்தது. ஒவ்வொரு குடும்பமும் திராவிட மாடல் அரசின் ஏதாவது ஒரு திட்டத்தால் பயனடைந்து வருவதாக பெரும்பாலான வீடுகளில் தெரிவித்தனர்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் - ஸ்டாலினின் மகளிர் படை வீடு வீடாக பரப்புரை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு எங்கும் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.



